449

REGISTRAR ... 25 APR 1931 MADRAS

கிராம்போன் சங்கீதம்.

மூன்றும்பாகம்.

மிஸ் S. R. கமலம்.

அவர்களால்

பாடிய பாடல்கள்

இதில் அடங்கி உள்ளன.

காபிரைட். விலை அணா-2.

1931

N. சரவண முதலியார்
திருவொற்றியூர்
மதராஸ்

NR21
N31
180808

௳

கடவுள் துணை.

மிஸ். S. R. கமலம்.

அவர்கள் பாடிவரும்

கிராம்போன் சங்கீதம்.

இராகம்-காப்பி-ஆதிதாளம்.

பல்லவி.

சென்று கனிபறித்துக்கொண்டு-நான்
சீக்கிரம் வருவேனுனு மின்று-அவர்

அநுபல்லவி.

கன்றை யிழந்த பசுபோலே
கலங்குவார் தாய் தந்தையிந் நாளே
கட்டழகி யாளே
இட்ட முடன்மேலோர் பசி
தீர்ப்பதென் கடமை யாலே- நான் (செ)

சரணம்.

தந்தை தாய்க்குத் துணை யாரு-நீ
தனித்திருந்தவரைக் காரு அவர்
சிந்தை கலங்குவார் வேறு
சிஸ்ருஷ்டைசெய்வோரார் கூறு
சிறுத்தைப் புலி சீறும்
தீவினைகள் நேரும் இங்கு
தீரத்துடனிரு போய்வாரேன் நான் (செ)

808

இராகம்-தெம்மாங்கு - ஆதிதாளம்.

பல்லவி.

ஆண்டி பண்டாரம் உன்னை
வேண்டிக் கொண்டேனே பழனி (ஆ

தண்டாமரை குகனே
சாமிசரவணனே
அண்டாதி தேவர்போற்ற
ஆறுமுகமாய் விளங்கும் (ஆ

பாத தரிசனமே
பார்க்கப் பழனி மலை
காதலா யோடிவந்தேன்
கால்வலி யகற்றிடுவாய் (ஆ

பஞ்சவர்க்குத் தூதுசென்ற
பரந்தாமன் றன்மருகா
தஞ்சமெனவே துதித்தேன்
சங்கடந்தீர் நீ முருகா (ஆ

கானக் குறத்தியின் மேல்
காதல்கொண்டு இங்கிதமாய்
வேண தினை மாவைத்தின்று
வேங்கைமரமாய் வளர்ந்த (ஆ)

கழுகுமலையில் வாழும்
கந்தப்பா ஷண்முகனே
தொழுதேனே பாலக னென்
துன்ப வினை போக்கிடுவாய் (ஆ

சந்திரமதி-தரு.

ஐயாவேதியரே என்னை அடிமைகொண்டவரே என்
பாலனும் பாம்பாலேமாண்டான் பாவி யென்னசெய்வேன்
அம்மா! அம்மா!! வென்று அழுதுதுடித்தானும்
அருமையாய் வளர்த்த யெந்த னுசைபாலகனும் (ஐ)
புத்தருகில் போயடுத்து புத்திரனை கண்டெடுத்து
பெற்றகடன் தீர்த்துவாரேன் போகவிடை தாரும் (ஐ)

இராகம்-அமீர்கல்யாணி ஆதி.

பல்லவி.

காம வாளி பாயுதே
கருத்தொடு விதமாகத்
தயங் குதே
கருணை செய்யடி என்
மட மானே (கா)

அனுபல்லவி.

தாமதிக்கலா குமோ நீ
தயவு செய்யடி மானே
கோமளமே மடமயிலே
கோபமேனோடி தேனே (கா)

சரணம்.

கொஞ்சிவரு முன்னே
ரஞ்சிதம் பேசவே
சஞ்சலம் தீரடி
நெஞ்சது மாறுதே (கா)

இராகம்-கல்யாணி-ரூபகம்.

பல்லவி.

மஞ்ச்சி கஞ்ச்சி காமாக்ஷி
நன்னு ப்ரோவவே தல்லி (மஞ்சி)

அநுபல்லவி.

பஞ்சாக்ஷரி சடாக்ஷரி
பார்வதி நின்னு நம்மிதினி (மஞ்சி)

சரணம்.

ஊரூரு திரிகி திரிகி
உன்னதாவு குரு தெரிகி
பாரி பாரி வச்சிதினி
பார்வதி நின்னு நம்மிதினி (மஞ்சி)

ஓங்காரி ப்ரணவ ரூபிணி
ஓஹோஹோ பால் பாபினி
ரீங்காரி நின்னு நம்மிதினி
நிக்ய நயன் தயசுடயே (மஞ்சி)

இலசுக் ஞான தயாபரி
ஏகாம்ப ரேஸ்வரி
பலமு நின்ன சித்தமௌன
பாக்ய விக் ரூபிணி தல்லி (மஞ்சி)

அரிச்சந்திர நாடகம்.

இராகம்-ஸ்ரீராகம், தாளம்-ஆதி.

பனியால் நனைந்து வெயிலா லுலர்ந்து
பசியாலலைந்து மூலைவாய்
அனியாயமெ ங்கண் அரவாலிறந்த
அதிபாவ மென்கொ லறியேன்
தனியே கிடந்து விடநோய் சொறிந்து
தரைமீதுருண்ட மகனே
இனியாரை நம்பி உயிர்வா ழ்வ மென்றன்
இறையோனும் யானுமவமே.
செங்கோலறத்தின் முறையே செலுத்துந்
திறலோ னெவர்க்கு முறவும்
வெங்கோப மன்னன் விரன்மன்னன் நம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள
பங்கேருகத்து மலர்போல் விளங்கு
மதனுல் மகிழ்ந்த பரிவால்
எங்கே யென்னுசை மகனென்றுரைக்கின்
எதிரேது சொல்வேன் மானே.

வேண்டித் தவம்புரிந்தேன் வெகுவிரதமிருந்தேன்
விரும்பியுனக்காகவே மகனே மகனே மகனே
ஆண்டியருளால் கரு வாகி நீயுதித்த
அடிவயிற்றிடம் தந்தேன் மகனே மகனே மகனே
காலாகால வுணவைக் கடிந்து வொளிமழுங்கி
கறுக்க:முலைக்காம்புகள் மகனே மகனே மகனே
தூலம் வதங்கி பால் தோன்றிடக்கண்டுமே
தோஷி மனமகிழ்ந்தேன் மகனே மகனே மகனே

அரிச்சந்திர நாடகம்.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

யார் போய் சொல்லுவார்
இந்தவேளை நாதனுக்கோடி (யா)

அனுபல்லவி.

பாவிச் சந்திரமதி பழிகாரி பெற்றபாலன்
பாம்பு கடித்திறந்து பரமபதம் சென்றானென்று (யா)
பார்ப்பானுக்கடிமையாகி பரதேசிபோலே நாங்கள்
பணத்துக்கு பணைத்துவாடி பலதொண்டு செய்தோமென்று
அய்யனின் கட்டளைப்போல் அடவி சென்றமேபாலன்
அரவங்கடித்திறந்து போய்தான் உயிர் சாய்ந்தானென்று
பேய்கள் கரிபுலிகள் பெருத்த வனந்தனிலே
பாவி சந்திரமதி பிள்ளையை யிழந்தாளென்று (யா)

(மயான காண்டம்.)

இராகம்-நாதநாமக்கிரியை? இராகம்-எதுகுலகாம்போதி; தாளம் - ரூபகம்.

ஐயோ மகனேநீ யலறித்துடித்திட அரவந்தீண்டலாச்சே
அருள் போச்சே இருளாச்சே
அப்பவே காண்பதெப்பவே
காண்ப தெப்பவே எப்பவே எப்பவே (ஐ)
கப்பிய காட்டினில் அப்பாதேவதாசா
காலன் தீண்ட கண்ணனே
சொல்லு விண்ணனே சொல்லு விண்ணனே
விண்ணனே விண்ணனே (ஐயோ)

இராகம்-ஈசமனோகரி-தாளம்-ஆதி.

அப்பா மாண்டாயோ பாலனே
எப்போ காண்பேன்டா என் சீலனே

கப்பியே உன்னை காலன் தீண்டிட
ஒப்பிவந்ததோ ஒளிநியே
அப்பா அப்பா அப்பா அப்பா
அப்பா அப்பா அப்பா அப்பா
அப்பப்பா அப்பப்பா அப்பப்பா அப்பப்பா
அப்பா அப்பா அப்பா அப்பா (அப்பா)
சத்தியம் பொய்த்ததோ சந்திரமதிபெற்ற (அப்பா)
பாவியாக்கி என்னை பாக்கவிட்டாயோ
கூவித்தாயென்றே குரலுமற்றுயே
ஆவிபோகும் போது அம்மா
அம்மா அம்மாவென்றுமே (அப்பா)

இராகம்-காப்பி-ஆதி.

(கலிலோ ஹரி)

பல்லவி.

கலியாண கருத்துனக் கிருந்தால்
கந்தனை யடை வாயே
துடர் வாயே
கலியாண கருத்துனக் கிருந்தால்
கந்தனை மணர் வாயே
புணர் வாயே
கருணை யுடன் (க)

அநுபல்லவி.

பொலிவான தினைப் புனக்காவல்
புரிகிற மட மானே
பஞர் தேனே (க)

சரணம்.

தெள்ளிய புகழ் வளர்
தேவர்கள் பணிந்திடும்
தெய்வ குஞ்சரி :வேலன்
புள்ளின் மயிலின் வளர் முருகன்
. புண்ய சொரூப சீலன்
எள்ளிலே நெய்யது போலுறையும்
இன்ப மளிக்கும் லோலன்
அநு கூலன் (க)

மழுமான் கரத் தேந்திடு மீசன்
மகனாகும் ஆறு முகன்
விழிமூன்றுடை யோன்வனமாலிகை
விமலர் பிராணின் மகன்
பழிசெய்த சூரரைக் கொன்று
பரிபாலித்த தேசிகன்
ஷண் முகன் (க)

ராமாயணம் கைகேயி பாடல்.

இராகம்-தன்யாசி-ஆதி.

பல்லவி.

மதுர மொழி ராமனை-என் ஏசுகிறாய் (ம)

அனுபல்லவி.

சதனவனே - சுகுணமானவன்
சுந்தரமானவன்
தரையாளுவதும் முறையே (ம)

சரணம்.

மாசிலாத மதி முக முடையோன்
தேசமெல்லாம் புகழ் தீரமதுடையோன்
தேவரும் போற்றும் திவ்ய குணளன்
சுதனவனே
தரையாளுவதும் முறையே (ம)

இராகம் - நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

பல்லவி.

ஆனல் உனக்கொரு அற்புதம் கூறுவதை
அறிந்துக்கொள் தெரிவையரே (ஆ)

அனுபல்லவி.

மானுபரணன் மகன்
வடிவேல் செய்த தீங்கை
தேனர் மொழி தன்னாலே
தெரிவிப்பேன் பொல்லாங்கை (ஆ)

சரணம்.

வள்ளி குஞ்சரியுடன்
வரந்தர யெந்தன்முன் தான்
வருகுவா ரென்றுமே
வழிபார்த்து நானிருந்தேன்
புள்ளி மயிலின் மீது
புண்யன் வந்தி யிங்கனம்
உள்ளம் பூரிக்கத் தருவாய்
உண்மையென்று நம்பினேன்முனம் (ஆ)

இராகம்-செஞ்சுருட்டி ஆதி.

பல்லவி.

வேதாந்த சாரா ஸ்ரீ
விசித்ர மயூரா சாமீ (வே)

அநுபல்லவி.

வேகமான மயில்
வாகனத்தி லீருந்
தேகருணை செய் (வே)

சரணம்.

விமலா கரப் பொருளே
வேலாயுதா வருளே
மூலாதரப் பதி (வே)

கந்தா னந்தா சிவ
மைந்தா எந்தனையா
தந்திடுவாய் வரம் (வே)

நாதாந்த காருண்யா
நலந்தர சுப்ர மண்யா
ஞால மீது வரும்
நீல மா மயிலின்
மேலொளிர் முருகனே (வே)

நலமுற்ற பூவில்
நானொரு பாவி
நாளு முனை துதியாமலே
நானின்றேன் மதியாமலே (வே)

சந்திரமதி அகவல்.

இராகம் - நாதனுமக்கிரியை.

என்னுருயிரே எனதுகண்மணியே
முன்னுளினுன்னையர் முக்கண்ணனைநோக்கி
அன்னமில்லாமல் அருந்தவஞ்செய்தார்
பிள்ளையில்லாமல் பெருந்தவஞ்செய்தார்
வெள்ளைவிடையோன் விமலனாருளினல்
நீ கருவுருவாகி காரணமாகியே
திருவுருவாக ஜெனிக்கயென்வயிற்றில்
நீஜெனித்தலூராமாதம் உடலதுதளர்ந்து
ஈராமாதம் இடையதுதளர்ந்து
பச்சைநரம்புகளோடி பால்முகஞ்சுரந்து
மூன்றுமாதமுகமெலாம்வெளுத்து முலைநுனிகறுத்து
நான்காமாதம் நசக்கியமசக்கை
அடா ஐந்தாமாதம் அழகுசீமந்தம்
ஆறுமாதம் அடிவயர்கனத்து அரையதுநொந்து
ஏழாமாதம் என்னுவுக்கினியதைப்புசித்தேன்
எட்டாமாதம் பட்டணமறிய யென்பாங்கியே
தொட்டுமேபட்டு பாவாடையுடுத்தினேன்
ஒன்பதாமாதம் உன்மாமன்மார்வந்து ஓவியமுடனே
எந்தனுக்கென்று சீமந்தம்செய்ய
பத்தாமாதம் பாலகாவுன்னை மெத்தவேதனையால்
நெற்றிவேர்வை நிலத்தினில்வீழ்க
பற்றியேவுன்னைப் பாலகாபெற்று
இந்தபாம்புக் கிட்டேனடாபாலா
குழந்தைதான் பிறந்தாயென்று
உங்களையர் புவிராஜர்கேட்டு
கொள்ளைகொள்ளையென்று கோடிபொன்தானமீந்தர்

பிவதமோதிடும் வேதியர்க்கீய்ந்தார்
ஜன்னும்வண்டியிற்சர்க்கரை வைத்துமேவழங்கினூர்
உந்துவயதுடனருமையாய் வளர்ந்துநீவருகையில்
(கன்னே பள்ளியில்வைத்து பாங்குடன்வித்தையைக்
றேற்றுவருகையில் நீவேட்டைக்குச்சென்று
வேட்டைகளாடி வீட்டுக்குவந்தால்
உன்னருகில்தாதிகள் ஆலாத்திசெய்ய
உன்பக்கத்தில்தாதிகள் பணிவிடைசெய்ய
இத்தனைவகையுடனிருந்திடப்பார்த்தேன் இப்போது
உந்தன்பக்கத்தில்நாய்நரிகள் பார்த்துமேஇருக்க
கொள்ளிவாய்பிசாசும் கூடியேயிருக்க
இப்படியுனைபார்க்கவும் பிரமனெழுதினனறியேன்
என்தலைவிதியோ எவர்செய்யும் சதியோ
எந்தனுக்குகொள்ளி யிடுவாயென்றெண்ணினேனன்
இப்போது வுந்தனுக்குகொள்ளி
யுகந்துநான வைசகலானேன்

இராகம் - விவர்தினி. தாளம்-ஆதி.

பல்லவி.

புவிரா ஜனே புண்யாகரா:புகழ்
பூஷணனே புருஷார்த்தனே (புவி)

அனுபல்லவி.

கவி மாரனே கமழ்தீரனே
கருணைப்பிர தாபா உயர்சுப்ரதீபா (புவி)

சரணம்.

புவிமுலைடா தர் தமைரக்ஷிக்க
குளிர் தென்றல் வாடை மிகவே என்மீதே
மேவிவாழ்சுக மிதமாக நான்
தருணம் இவ்வேளை வரவே முன்நானே (புவி)

இராகம்-கேதாரகௌளம் ரூபகம்.

பல்லவி.

மோடி செய்ய லாகுமோடா
மோகம் தீரடா

அநுபல்லவி.

ஓடிவந்தேன் உன்னைச்சேர
கூடடா விடேனடா (மாம)

சரணம்.

அந்தமாரன் அம்புவந்து
அதிவேக மாக மாய்க்குதே
இந்த நேரிழை மேல
ஏதடா வாதடா (மோ)

தென்றலும் வீசுது
திங்களும் பாயுது
இந்திர சம் பந்தம்
அந்தமும் ஓயுது
நன்றியை மறந்து
நாயகியைத் துறந்து
நாடினதேன் ஓடினதேன் (மோ)

இராகம் - கேதாரம். தாளம் - திஸ்ரரூபகம்.

பல்லவி.

என்னடிமுழுகிம் போச்சுது இதனால் நமக்கு (என்)

அனுபல்லவி.

இன்னமுனக் கேனிந்த துற்புத்தி
இதனால் உனக்கு என்ன கீர்த்தி (என்னடி)

சரணம்.

கோசலைசொல்லுக்கிரண்டோ
கூனியோநான்சொன்னதுண்டோ
மோசக்கருத்தை நீயோ கொண்டும்
மோடிவ்வாருக மொழிவதொன்ருே (என்)

பின்னவன்பரதனன்ருே ஏற்பதற்கு ராமனன்ருே
அன்னவை அறிந்தே பட்டம்
அளிம்பதே எனக் கிஷ்டம் (என்)

———

இராகம்-மோகம்-ஆதிதாளம்,

பல்லவி.

சத்தியம் நீர் செய்தால் நம்புவேன்
தையலைப் பிரியே னென்று
மெய்யாக என் முன்னின்று (சத்தி)

அனுபல்லவி.

உத்தமி பாதகி உமைபரமேசன்
உறுதியாய்ச் சொல்கிறேன் உனக்கு நான் தாசன்
எத்தினமு முனது மேல்விசு வாசன்
இதற்கு ஐயமில்லை என்றுங்கள் நேசன்
சத்தியமாக சொல்லுகிறேன்
சொல்லும்நெறி பிசகிடா
தெனதுள மகிழொடு (சத்தி)

———

பாமாவிஜயம்.

இராகம்-பிரதாபவராளி. தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணு வீண் கபடஜாலமென்ன் நீ
காதல் கொண்டதேது சுந்தர (க)

அனுபல்லவி.

இன்னாள் எனையே ஒருநாழிகையே உன
தினிமையான கணிகை வேறு (க)

சரணம்.

இன்னாள்உன தாசையே பெருமோசம்
இனிதுகுத்தி உமை வெறுத்த தின்னாள்
உன தாசையே பெருமோசம்
சொனால் வரும் கோபமே கோபாலா
உன தினியபாமை இடமே போகும் கண்ணா (க)

ஹரி காம்போஜீ தாளம் ஆதி.

பல்லவி.

காக்ஷி கண்காக்ஷியே திருவனந்தபுரத்தின் (காக்ஷி)

அநுபல்லவி.

மாக்ஷிமை தங்கிடும் அரசாட்சி செய்ய தாக்ஷியில்லா (க

சரணம்.

மாதமும் மாரியாக பெய்யுந்தரும நீதியே
மானிலம் புகழும் மலையாள மென்னும் கியாதியே
மா பலா தென்னம் வாழைகள் சூழ்ந்து
நிழலே தருகவெ கமுகஞ் சாய்ந்து
இந்த வாசனை புஷ்பத் தென்றலும் நாய்ந்து
பரிமளிக்குஞ் சாரம் இணையிலா சிங்காரம்
இதனைச சொல்வதாலோ போதாத விவகாரம் (க)
பார்புகழும் பத்ம நாபன் சந்நிதி யமைந்ததும்
கோயிலின் நேரே இரண்டு குளங்களமைந்ததும்
கோடா கோடியாக சில விட்டு
புத்தன் கச்சேரி யொன்றமைந்த ஐகோர்ட்டு
அதின் ஓரத்தில் போகுதே மெயின் ரோட்டு
சுற்றிலுங் கம்பி கேட்டு சூழ்ந்த போலீஸ் பீட்டு
சுந்தரம் தமிழ் பாட்டு சொல்லக் கமலம் கேட்டு (க)

180808

இராகம் காம்போஜி தாளம் ரூபகம்.

பல்லவி.

முருகனிடமென் முறைசொல்வாய் கிளியே

மகுடங்கள்.

நாளும் முழங்குதுதி செழும்பழனி
யிளங்குமரனெனும் ப்ரபலகுக (முரு)
முகை நகையுற அகமகிழ் திரு
புகழுரைவதி லொருவர் மருவிய (முரு)
முப்பிறப்பில் கொண்ட வினைமூண்டி ருந்தால்
இப்பிறப்பில் அண்டிடாமல் வேண்டுவதாய சொந்த (முரு)
மூடமதியாலே பொல்லாத மாதர்களை
நாடி உடல் வாடி உளம் வேதனை யானதாலே (முரு)
முக்கியமிது பற் பல துயர்
பற்றுவது சகித்திடலாமல (முரு)
முற்றுமுனை நம்பிய யொருபக்தன் சொல்
சங்கதியென அந்த (முரு

அநுபல்லவி.

நெறிதருமு லகோர் புகழ்திரு
பெருநாளைப் பெரு மதுரையில்
திருநாளைப்பெருமான் புதல்வனும்
முன்னோர் ஏற்றம் இப்பிரபஞ்சநிதி
சுப்பிரமணியனெனும் (முரு)
நோயற்றவாழ்வுங் குறைவற்றசெல்வமும்
நுண்ணறிவும் தவப்புண்ணியஸ்நேகமும்
தூயயென்தாய் மனதுக்கமகற்றவும்
தூதுநீயே யினிவேறில்
தொண்டன் சுந்தரம் சந்ததம்
துதித்தேன் மதித்தேன்
பட்டணத்துசெட்டி சுக்கிலமுற்பவித்த
சற்புத்திரவிதரண குணநய அருணகிரியே (முரு)

சென்னை திருவொற்றியூர், கலைமகள் விலாச அச்சுக்கூடம்.

ஸ்ரீபகவத் தியானக்கொத்து.

இதில் ஈஸ்வரத்தியானம், கணேசதியானம், சிவசண்மு நந்ததியானம், நவரத்தினத்திருப்புகழ். மயில்பாட்டு, அற்பு ஆனந்ததேவாரத் தோத்திரத்திரட்டு, இந்தியஸ்நான உப சம், நாயன் மார்கள் திருநக்ஷத்திரக்கும்மி, தசாவதாரதி னம், ஸ்ரீகிருஷ்ணபூஜை ஸ்ரீகிருஷ்ணலீலாமிர்தம், ஸ்ரீபூஜா மாயணம், நாமராமாயணம், அற்புத ஆனந்தராமதியான ஆஞ்சநேயதியானம், நவக்கிரகத் திருப்புகழ் என்னும் 16-பு தகங்களும் அதற்குள்ள அஷ்டோத்திரங்களுடன் ஐதீகபட களுடன் கிலேஸ் கடிதத்திற் அச்சிடப் பட்டு நேர்த்தியா காலிகோபயிண்டு செய்திருக்கின்றது ஒவ்வொருவரும் க வுளை வழிபட்டு அவர் அன்பைப்பெறக்கூடிய தியானமுன யைச்செவ்வனே எடுத்துக் காட்டும் நூல்களுள் இது மிகவு சிறந்ததாகும் எப்போதும் கையில் வைத்துக்கொண்டு திய னத்தை வாசிப்பதற்கு ஏற்ற பாகெட் அளவில் தயார்செய்ய பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1.

இகபரஞான சாகரத்திரட்டு.

இது எல்லாருக்கும் அவசியமான ஓருசிறந்த நூல் மனி வாழ்க்கைக்கு இன்றியமையாத இகரஞான தத்துவங்களை செவ்வனே போதித்து நல்வழிப்படுத்தும் அரியவிஷயங் ளடங்கிய ஓர்சிறந்த நூல் தெய்வப்புலமை வாய்ந்த அருங்க களாலும் சிவனடியார்களாலும் ஆழ்வாரா சாரியர்களாலு ஞானச்சாரிகளாலும் இன்னும் பண்டைய பக்தசிரோன்மண களாலும் திருவாய்மலர்ந்தருளப் பெற்ற பல பாக்களும் இ லடங்கி யிருக்கின்றன. இதன் விலை அணா 8.

எமது விலாசம்:---

கலைமகள் விலாச புத்தகசாலை

திருவொற்றியூர் போஸ்டு, மதராஸ்